# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## PRELIM EXAMINATION ( 2017-2018 )

**CLASS : IX**

| | | |
|---|---|---|
| **Maximum Marks : 80** | **TAMIL** | **Time : 3 hours** |
| மதிப்பெண்கள் : 80 | தமிழ் | நேரம் : 3 மணி |

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 14 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 14 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 36 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 36 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.
★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
★ வினாத்தாள் 8 பக்கங்களைக் கொண்டது.

### பகுதி – I

**1.** பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் பொய்யா மொழியாரின் பொன்மொழிக் கிணங்க, புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 29-04-1891 ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரது தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதிதாசன் துள்ளித்திரியும் தம் இளமைப்பருவத்தில் துடுக்கடக்கிப் பள்ளியில் சேர்ந்து, தித்திக்கும் முத்தமிழ்ப்புலமை பெற்றுத் தமிழாசிரியராய் பணிபுரிந்தார். "சுப்புரத்தினம் ஓர் கவி" என்று பாரதியாரால் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கவிஞர், பாரதியின்பால் தாம் கொண்ட பற்றால் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக் கொண்டார் அவரின் எண்ணத்திலும், எழுத்திலும், பேச்சிலும், புரட்சியின் புதுத்துடிப்பைக் கண்ணுற்ற அறிஞர் உலகம் அவரைப் புரட்சிக்கவிஞர் என்று அழைத்து மகிழ்ந்தது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

1 ) பாரதிதாசன் பிறந்த ஊர் எது ?
அ) புதுச்சேரி
ஆ) புதுவை
இ) விருது நகர்
ஈ) திருநெல்வேலி

2 ) பாரதிதாசனின் இயற்பெயர் எது ?
அ) கனக சபை
ஆ) இராமலிங்கர்
இ) சுப்பிரமணியம்
ஈ) சுப்புரத்தினம்

3 ) முத்தமிழ்  - பிரித்து எழுதுக.
அ)  முத்து + தமிழ்
ஆ)  மு + தமிழ்
இ)  மூன்று + தமிழ்
ஈ)  முதல் + தமிழ்

4 ) சுப்புரத்தினம் ஓர் கவி - என்று அறிமுகப்படுத்தியவர் யார் ?
அ) பாரதிதாசன்
ஆ) சுப்பிரமணிய சிவா
இ) பாவேந்தர்
ஈ) பாரதியார்

5 ) இளமையில் பாரதிதாசன் எவ்வாறு பணியாற்றினார் ?
அ) தமிழ் புலவராக
ஆ) தமிழாசிரியராக
இ) தமிழ்  கவிஞராக
ஈ)  தமிழ் நூலக அதிகாரியாக

**2.** பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

மிசோரம் என்ற மாநிலம், 21 ஜனவரி 1972-ம் ஆண்டு, நமது முன்னாள் பிரதம மந்திரி காலம் சென்ற இந்திரா காந்தி அவர்களால் மத்திய ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதியை தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்னால் அஸ்ஸாம் என்ற மாநிலத்தோடு இணைந்து இருந்தது. முன்பு இம்மாநிலமான மிசோரம், மிசாயி என்று அழைக்கப்பட்டது. மிசாயி என்பது ஒரு வகுப்புப் பிரிவினரின் பெயராகும். மிசோ என்பதன் பொருள் மலைமனிதன் என்பதாகும். மிஸாயி என்பது மலையாகும். இப்பகுதி உயரமாக இல்லை. ஆனால் எப்பொழுதும் பசுமையாக இருக்கும். கோடையில் அதிக வெப்பமில்லை. குளிர் காலத்தில் அதிகக் குளிரும் இல்லை. பர்மாவிலுள்ள சின் மலைகளிலிருந்து மிஸோ மக்கள் இந்தியாவிற்கு வந்ததாக வரலாறு கூறுகிறது. மக்கள் பல சிறு சிறு ஜாதிக் குழுக்களாக இருந்தனர். அதில் சிலர் சண்டையிடும் வீரர்களாக இருந்தனர். இவர்கள் சமூகம் தந்தை வழி முறையாகும். ஆண்கள் பல திருமணங்கள் செய்ய அனுமதியுண்டு. மூங்கில் பிரம்பு கூடைகள் பின்னுதல், துணி நெய்தல், சாயமிடுதல் இவர்களது முக்கிய தொழில்கள் ஆகும். வீடுகள் உறுதியாகக் கட்டப்படுகின்றன. வீடுகளைக் கட்டுவதில்  பெரும்பாலும் மூங்கில் களைப் பயன்படுத்துகிறார்கள். ஆண்,பெண் இருவருமே நகையணியும் பழக்கம் உள்ளவர்கள். இவர்கள் வண்ணங்களை விருப்புபவர்கள். இவர்களது  சேராவ்  என்ற நடனம் மிகவும் பிரசித்தி பெற்றது. அரிசி இவர்களது முக்கிய உணவாகக் கொண்டிருந்தார்கள். யானை, பன்றி, கோழி ஆகியவற்றின் மாமிசத்தை உண்கிறார்கள். காப்பி, கோகோ, ரப்பர், ஏலக்காய், முந்திரி ஆகியற்றைப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

1 ) மிசோரம் மாநிலத்தைத் தனி மாநிலமாக அறிவித்தவர்
அ ) இந்திரா காந்தி
ஆ) ராஜீவ் காந்தி
இ ) நரசிம்மராவ்
ஈ ) ஐ.கே.குஜ்ரால்

2 ) மிசோ என்பதன் பொருள்

அ ) மனிதன்
ஆ) மலைமனிதன்
இ ) கொள்ளைக்காரன்
ஈ ) வேட்டைக்காரன்

3 ) சின் - என்பது

அ ) மிசோரம் மாநிலத்திலுள்ள மலைத்தொடர்
ஆ) பர்மாவிலுள்ள மலைப்பகுதி
இ ) மலைஜாதி வீரர்களின் ஜாதியின் பெயர்
ஈ ) பர்மா மக்களில் பின்தங்கியவர்களின் பிரிவு

4 ) மிசோரம் மக்களின் பிரசித்திபெற்ற நடனம்

அ ) கதக்களி
ஆ) பரத நாட்டியம்
இ ) கரகாட்டம்
ஈ ) சேராவ்

5 ) மிசோரம் மக்களின் தொழில்களில் ஒன்று

அ ) தேனெடுத்தல்
ஆ) மீன் பிடித்தல்
இ ) கிழங்கு அகழ்தல்
ஈ ) துணி நெய்தல்

**3.** பின்வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக. **5 x 1 = 5**

உலக வரலாற்றில் சிறந்த மன்னர்களுள் ஒருவர், அசோகர். அவர் போரை வெறுத்தார். அவர் ஆட்சி அமைதி நிலவிய ஆட்சியாய் இருந்தது. அவர் புத்த மதத்தைத் தழுவினார். அவர் சமய பரப்புக் குழுக்களை இந்தியா முழுவதும் அனுப்பி புத்த மதத்தின் அறவழிகளைப் பரப்பினார். முதன்முதலில் கல்வெட்டுகளில் செய்தியைச் சொல்லும் முறையை அறிமுகப்படுத்தியவர் அசோகரே ஆவார். அவர் தன் நாட்டு மக்களின் பேசும் மொழியான பாலி மொழியைத்தான் கல்வெட்டுகளை எழுதப் பயன்படுத்தினார். புலனடக்கம், தூய எண்ணம், நன்றியுடைமை, அறக்கொடை புரிதல், அன்பு,சத்தியம், சேவை மனப்பான்மை, பெரியோர்களை மதித்தல் ஆகிய நன்னெறிகளை அசோகர் கடைபிடித்தார். மக்களையும் கடைபிடிக்கச் செய்தார். அவரது குறிக்கோள் அவருடைய மக்களின் உள்ளங்களிலெல்லாம் தருமத்தை நிலைநாட்டுவதே ஆகும். அசோகர் அரசர்களில் விண்மீன் போன்றவர் எனப் புகழப்படுகிறார்.

## பகுதி - ஆ **1 x 6 = 6**

**4.** நீ கண்டு களித்த இன்பச்சுற்றுலா குறித்து தோழன் அல்லது தோழிக்குக் கடிதம் எழுதுக.

( அல்லது )

தெரு மின்விளக்குப் பழுது நீக்க வேண்டி மின்வாரியச் செயற்பொறியாளருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

எக்கடிதமாயினும் உமது முகவரி,

தமிழ்ச்செல்வன் / தமிழ்ச்செல்வி , கபிலர் நகர், மதுரை - 625 002.

5. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக. **1 x 8 = 8**

அ) முன்னுரை - சிக்கனம் - சிறு சேமிப்பு - சேமிப்பின் தேவை - சேமிக்கும் வழிமுறைகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.

ஆ) முன்னுரை - நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - நோய் வரக் காரணம் - இந்தியாவை அச்சுறுத்தும் நோய்கள் - தீர்க்கும் முறை - முடிவுரை

ஆ) முன்னுரை - கல்வியின் சிறப்பு - கற்றலுக்குரிய பருவம் - ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது - பசுமரத்தாணி போல் பதியும் - நினைவாற்றல் வளர்ச்சி - முடிவுரை.

பகுதி - இ

6. சான்று தருக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) முகத்தலளவை ஆகுபெயர்

அ) ஐந்து கிலோ என்ன விலை

ஆ) ஒன்று பெற்றால் ஒளி மயம்

இ) நான்கு லிட்டர் தேவை

ஈ) இரண்டு மீட்டர் தா

2 ) திணை வழு

அ) என் மாமா வந்தது

ஆ) கண்ணகி வநதான்

இ) முட்டையிட்டது சேவலா? பெட்டையா ?

ஈ) நாங்கள் வந்தார்கள்

3 ) நேரொன்றாசிரியத்தளை

அ) பலர் புகழ் கபிலர்

ஆ) பாரி பாரி

இ) நிலவரை நீள்புகழ்

ஈ) தாமரைப்பூ குளத்தினிலே

4 ) குறில் இணைந்து வருதல்

அ) படம்

ஆ) படா

இ) படாம்

ஈ) பட

5 ) இயல்புப் புணர்ச்சி

அ) பொற்குடம்

ஆ) வாழைமரம்

இ) தமிழ்ப்புத்தகம்

ஈ ) நாகியாது

7. நிரப்புக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) மாட்சி என்பது __________ .

அ) தொழிற்பெயர்

ஆ) பண்புப்பெயர்

இ) வினைச்சொல்

ஈ) வினையாலணையும் பெயர்

2 ) அளபெடை என்னும் சொல்லுக்கு ___________ என்பது பொருள்.

அ) மாத்திரை பெறுதல்

ஆ) மாத்திரை கொடுத்தல்

இ) மாத்திரை எடுத்தல்

ஈ ) மாத்திரை குறைதல்

3 ) கழுத்தினின்று பிறப்பவை __________.

அ) வல்லினம்

ஆ) மெல்லினம்

இ) இடையினம்

ஈ ) ஆய்தம்

4 ) ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது ________.

ஆ) உவமையணி

ஆ) ஏகதேச உருவக அணி

இ) பிறிதுமொழிதலணி

ஈ ) வேற்றுமையணி

5 ) பொருள்கோள் _______ வகைப்படும்.

அ) ஐந்து

அ) ஆறு

இ) ஏழு

ஈ) எட்டு

8. அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) ஆந்தை கத்தும் (மரபாக்குக)

அ) ஆந்தை கூவும்

ஆ) ஆந்தை அகவும்

இ) ஆந்தை அலறும்

ஈ ) ஆந்தை கரையும்

2 ) உறுதல் ( முன்னிலை திரிந்த தொழிற்பெயராக மாற்றுக )

அ) உறு

ஆ) ஊறுதல்

இ) ஊறு

ஈ ) உறா

3 ) மல்லிகைப்பூ ( அலகிட்டு எழுதுக )

அ) நேர் நேர் நேர்

ஆ) நிரை நிரை நிரை

இ) நேர் நிரை நேர்

ஈ ) நிரை நேர் நேர்

4 ) ஒரூஉ மோனை ( எச்சீர்களில் ஒத்து வரும் )

அ) 1, 2, 3

ஆ) 1, 2, 4

இ ) 1, 4

ஈ ) 1, 3

5 ) குருத்து + ஓலை ( புணர்த்துக )

அ) குருத்துஒலை

ஆ) குருத்ஓலை

இ) குருத்தோலை

ஈ ) குருத்தியோலை

**9.** இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) பொன்னன்

அ) சினைப்பெயர்ப் பகுபதம்

ஆ) பொருட்பெயர்ப் பகுபதம்

இ) இடப்பெயர்ப் பகுபதம்

ஈ ) காலப்பெயர்ப் பகுபதம்

2 ) இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்

அ) முரண்தொடை

ஆ) எதுகைத் தொடை

இ) மோனைத்தொடை

ஈ ) அந்தாதித் தொடை

3 ) சிந்தடி

அ) ஆறுவது சினம்

ஆ) நாட வளந்தரு நாடு

இ) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

ஈ ) ஈவது விலக்கேல்

4 ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

அ) வேற்றுமையணி

ஆ) பிறிது மொழிதலணி

இ) உருவக அணி

ஈ ) இல்பொருள் உவமையணி

5 ) மாறாக் காதலர் மலை மறந்தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளை நெகிழுமாமே
கூறாய் தோழி யான் வாழுமாறே

அ) தாப்பிசைப் பொருள்கோள்

ஆ) அளைமறி பாப்புப் பொருள்கோள்

இ) அடிமறி மாற்று பொருள்கோள்

ஈ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

**10.** சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) அ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது சாரியை எனப்படும்.

ஆ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது சந்தி எனப்படும்.

இ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது விகாரம் எனப்படும்.

ஈ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது பகுதி எனப்படும்.

2 ) அ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நெடிலடி
ஆ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நேரடி
இ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி
ஈ ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது குறளடி

3 ) அ) முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 12 ஆகும்.
ஆ) முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 18 ஆகும்.
இ) முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 30 ஆகும்.
ஈ) முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 216 ஆகும்.

4 ) அ) இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள் ஆகும்.
ஆ) இல், அல், ஆ முதலியன எதிர்கால இடைநிலைகள் ஆகும்.
இ) இல், அல், ஆ முதலியன நிகழ்கால இடைநிலைகள் ஆகும்.
ஈ) இல், அல், ஆ முதலியன இறந்தகால இடைநிலைகள் ஆகும்.

5 ) அ) தொடை விகற்பம் மொத்தம் இருபத்தைந்து.
ஆ) தொடை விகற்பம் மொத்தம் முப்பத்தைந்து.
இ) தொடை விகற்பம் மொத்தம் பதினைந்து.
ஈ ) தொடை விகற்பம் மொத்தம் எட்டு.

பகுதி - ஈ

**11.** பழந்தமிழகத்தின் வணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்கள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, இஞ்சி, ஏலக்காய், இலவங்கப்பட்டை முதலானவை குறிப்பிடத்தக்கன. தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப்பட்டும்,சருக்கரையும் தமிழகத்தில் இறக்குமதி ஆயின. கரும்பு அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

1 ) பழந்தமிழகத்தின் வணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்ற நூல்கள் யாவை ?
2 ) தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் நான்கினைக் குறிப்பிடுக.
3 ) தமிழகப்பொருட்கள் எங்கு விற்கப்பட்டன ?
4 ) தமிழகத்திற்கு இறக்குமதியான பொருட்கள் யாவை ?
5 ) சீனாவிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்ட பயிர் எது ?

**12.** பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. **4 x 1 = 4**

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

<u>வினாக்கள்</u>

1 ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) சுரதா
ஆ) காரியாசன்
இ) தேவகுலத்தார்
ஈ ) நக்கீரனார்

2 ) தலைவி தலைவன் மீது கொண்ட அன்பு எதனை விடப் பெரியது ?

அ) மலையை

ஆ) நிலத்தை

இ) கடலை

ஈ ) வானத்தை

3 ) கடலைக் குறிக்கும் சொல் எது ?

அ) கருங்கோல்

ஆ) குறிஞ்சி

இ) சாரல்

ஈ ) நீர்

4 ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?

அ) புறநானூறு

ஆ) குறுந்தொகை

இ) சிறுபஞ்சமூலம்

ஈ ) முத்தொள்ளாயிரம்

**13.** பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக. **4 x ½ = 2**

1 ) எனைத்தானும் _______ கேட்க அனைத்தானும்
ஆன்ற ________ தரும்.

2 ) அன்புநாண் ஒப்புரவு ________ வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய _______.

**14.** ஏதேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. **2 x 4 = 8**

1 ) செல்வத்துப் பயனே ஈதல் - என்பதனைப் புறநானூற்றின் வழி நின்று விளக்குக.

2 ) இயேசுநாதரின் அருள்திறனை விளக்குக.

3 ) நல்வினை, தீவினை பயனாக மணிமேகலை கூறுவன யாவை ?

4 ) விதுரனைப் பாண்டவர் எவ்வாறு வரவேற்றனர் ?

**15.** ஏதேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக. **2 x 5 = 10**

1 ) திராவிடம் என்னும் சொல்பற்றிக் கால்டுவெல் கூறுவன யாவை ?

2 ) புலம்பெயர்ந்த தமிழர் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது ?

3 ) பொங்கல் கொண்டாடும் முறையை எழுதுக.

4 ) உயிர்கோளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் யாவை ?

5 ) கல்விக்கண் திறந்த முதல்வர் எனக் காமராசர் போற்றப்படக் காரணம் யாது ?

**16.** ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 x 7 = 7**

1 ) நேர்மை

2) இராணி மங்கம்மாள்

3) நோய் தீர்க்கும் மூலிகைகள்